**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

STC.No.01/2026

தேதி: 10.03.2026

**<u>அ.சா.1– பரிமளா, க/பெ. பூமிநாதன்</u>**

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எவ்வளவு நாளாக நானும், எனது கணவரும் பிரிந்து இருந்தோம் என்றால் வழக்கு போடுவதற்கு முன்பு இருந்தே பிரிந்து இருந்தோம். எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ கோரி HMOP No.14/2014 தாக்கல் செய்திருந்தால் என்றால் சரிதான். மேற்படி, மனுவில் சேர்ந்து வாழ கோரி கடந்த 11.06.2019 அன்று தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஜீவனாம்சம் வேண்டும் என்று MC.NO.2/2016 குளித்தலை JM–1 நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பின்னிட்டு, 5 வருடம் கழித்து தான் DVC.NO.2/2021 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

2. MC.NO.2/2016 வழக்கு குடும்ப நல நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சொந்தமாக வீடும், வாடகைக்கு கடை வைத்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடை மூலம் மாதம் ரூ.40,000/– மும், விவசாயம் மூலம் மாதம் ரூ.30,000/– வருமானம் ஈட்டி வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொந்தமான எனது கணவருக்கு டிராக்டர் இருப்பதாக சொல்வது தவறு வாடகைக்கு தான் ஓட்டி வருகிறார் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றம் உத்தரவை மதித்து எனக்கு மொத்தம் ரூ.3,00,000/ ஜீவனாம்சமும், குழந்தைகளுக்கு வீடும் எனது கணவர் எழுதி வைக்கிறார் என்றால் இது வேண்டாம் பத்தாது.

3. எனது குழந்தைகளின் திருமண செலவு எனது கணவரே ஏற்றுக் கொள்கிறார் என்றால் தலா ரூ.20,00,000/– மொத்தம் ரூ.40,00,000/– வேண்டும். திருமணத்தின் போது சீர்வரிசை செய்த நகை 6 பவுன் எனது கைவசம் உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவை மதித்து எனது கணவர் சேர்ந்து வாழ்ந்து எனது தேவைகளையும், குழந்தைகளின் தேவைகளையும் பார்த்துக் கொள்ள தயாராக உள்ளார் என்றால் எனது கணவர் இன்னொரு கல்யாணம் செய்து விட்டார். நான் தொடர்ந்து எனது கணவருடன் சேர்ந்து வாழவில்லை என்பதால் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2, 3 மனுதாரர்கள் மிரட்டி தந்தையுடன் சேர விடாமல் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால், எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் வேலைக்கு செல்ல முடியாமல் வருமானம் இல்லாமல் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்

என்றால் சரியல்ல. நான் போட்ட மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 11:18:46 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**